3. தகவல் கோரல்—தொடர்ச்சி

ஆங்கிலத் தொலைக்காட்சி செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்குப் போகலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இதற்குமேலேயும் இப்படி நடந்துகொள்வது முறையல்ல. என்னுடைய பொறுமைக்கும் ஓர் எல்லை இருக்கிறது. (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. என்னுடைய பொறுமைக்கும் ஓர் எல்லை இருக்கிறது. உங்களையெல்லாம் அவையில் வைத்துக்கொண்டுதான் சபையை நடத்தவேண்டுமென்று நான் விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்ற முறையிலே, உங்களை வைத்துக்கொண்டு இந்தச் சபையை நடத்தவேண்டுமென்பதுதான், என்னுடைய விருப்பம். ஆனால், அதற்கு மாறாக நீங்கள் செயல்பட்டால், உங்கள்மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர, எனக்கு வேறு வழியில்லை. இறுதியாக நான் உங்களை எச்சரிக்கிறேன். தயவுசெய்து அமைதியாக அமரும்படி உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இந்தச் சபையை நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு தரும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன், ஆங்கில நாளிதழ் ஒன்றை உயர்த்திக் காண்பித்தார். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டனர்.)

மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் சபையினுடைய விதிகளுக்குக் கட்டுப்படாமல் தொடர்ந்து எனக்கு தொல்லை கொடுத்தால், நான் சபையை நடத்த முடியாது. (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) நான் எத்தனையோ முறை உங்களைப் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன். இந்தப் பொருள் குறித்து இல்லாமல் வேறு பொருள் குறித்துப் பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்) இந்த சப்ஜெக்ட் இல்லாமல், வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுகிறீர்களா? நான் அனுமதி தருகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. வீ. அலெக்சாண்டர், திரு. சு. ரவி, திரு. தூசி கே. மோகன் உள்ளிட்ட சிலர் கைகளில் சில தாள்களை உயர்த்தி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை நோக்கிக் காண்பித்தனர்.)

2017 ஜுன் 14] [பேரவைத் தலைவர்]

இந்தப் பொருள் குறித்துப் பேசுவதாக இருந்தால், நான் அனுமதி தரமுடியாது. வேறு பொருள் குறித்துப் பேசுவதாக இருந்தால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் நான் அனுமதி தருகிறேன். ஆனால், இந்தப் பொருள் குறித்துப் பேசுவதாக இருந்தால், நான் அனுமதி கொடுக்க முடியாது. இது என்னுடைய இறுதி எச்சரிக்கை. (குறுக்கீடுகள்) இது என்னுடைய இறுதி எச்சரிக்கை என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டனர்.)

எனக்கு ஒத்துழைப்பு கொடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எனக்கு சபையை நடத்த ஒத்துழைப்பு கொடுக்காமல், இதுபோன்று நடந்துகொள்வது மிக மிக வருத்தத்திற்குரியது; கண்டிக்கத்தக்கது. இதுபோன்று நாளிதழ்களைக் காட்டுவதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. நாளிதழ்களை வைத்து நான் ஒன்றும் செய்ய முடியாது. ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11—35

(எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தான் வைத்திருந்த ஆங்கிலப் பத்திரிக்கை ஒன்றை உயர்த்திக் காண்பித்தார்.)

எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் கையில் எதையாவது கொண்டு வந்து, இந்தமாதிரியெல்லாம் அவையில் காண்பிக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்கு சபையை நடத்த ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

உங்களை இறுதியாக எச்சரித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) இந்தச் சபையை நடத்த எனக்கு ஒத்துழைப்புத் தரும்படி உங்களிடம் பலமுறை நான் கேட்டுவிட்டேன். நீங்கள் சபையை நடத்த ஒத்துழைப்புத் தர மறுக்கிறீர்கள். எனக்கு வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) உங்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)